மலர் - 27 / இதழ் -06 / ஜூன் 2026
Volume -27/Issue - 06 / June 2026
தமிழ் மாத இதழ் /தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
# VALARUM VINNARASU




INDIA CHURCH GROWTH MISSION
இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

பரிசுத்த வேதத்தில் தாவீது கூறுவதுபோல, “அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை” (சங்கீதம் 34:5).

இந்த வசனத்தின்படி, கர்த்தரை நோக்கி கூப்பிடும் போதெல்லாம், அவர் நமது முகத்தை வெட்கப்படவிடாமல், பிரகாசிக்க பண்ணுகிறவராயிருக்கிறார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலையிலுள்ள கொட்டப்புத்தூர் கிராமத்தில் அருட்பணியாற்றியதின் விளைவாக, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் கூடி தற்காலிக இடத்தில் ஆராதனை செய்து வந்தார்கள்.

கோயம்புத்தூர் - இரத்தினபுரியிலுள்ள, சிஎஸ்ஐ தூய பேதுரு ஆலய விசுவாசிகளின் உதவியினால், கொட்டப்புத்தூரில் ஓர் ஆலயம் கட்டப்பட்டு, தேவநாம மகிமைக்கென்று, மே 7ஆம் தேதி, ஆயர் **Rev.A.** விக்டர் பிரேம்குமார் அவர்களின் தலைமையில் மங்களப் படைப்பு செய்யப்பட்டது. இதற்கு உதவிய பேதுரு ஆலய ஆயர் மற்றும் விசுவாசிகளுக்கு இயக்கத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மே 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில், மதுரை மாவட்டத்திலுள்ள கிராம சபைகளை பார்வையிடத் தேவன் உதவினார். அனைத்து திருச்சபைகளிலும், **CVG (VBS)** விடுமுறை வேதாகமப் பள்ளி வகுப்புகள் நடைபெற்றன. இயேசு கிறிஸ்துவை அறியாத சிறுவர் சிறுமிகள் வேத வசனங்களையும், வேத பாடங்களையும் கற்றுக் கொள்வதிலே மிகுந்த ஆர்வம் காட்டியது மிக்க மகிழ்ச்சியாயிருந்தது.

மதுரை மாவட்டத்திலுள்ள பரமன்பட்டி திருச்சபையின் 38ஆவது ஆண்டு விழா மே 10ஆம் தேதியன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து




கொட்டப்புத்தூர் ஆலயம் திறந்து வைக்கப்பட்டபோது...



பரமன்பட்டி ஆலயத்தின் ஆண்டுவிழா நடைபெற்றபோது...



சத்தீஷ்கர்- வீட்டுக்கூரையின் கீழ் VBS நடைபெற்றபோது...



இந்திரா நகர் ஆலயத்தின் மறு ஆலயக்கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சி கடைசிப்பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

**அருள்திரு.G. பொன்னுராஜ்**
**அருள்திரு. இம்மானுவேல் பாண்டி**
**திரு. இரா. பாலசுப்பிரமணியன்**
**திருமதி. ரேணுகா பிரின்ஸ்**

ஆண்டுச் சந்தா:₹200/- ஆயுள் சந்தா:₹1500/-

வளரும் விண்ணரசு

*நமது இந்தியாவில் உள்ள எல்லா மக்கள் கூட்டத்தினரையும், இயேசுவின் சீடர்களாக்க பாரம் கொண்ட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் (ICGM) துதி-ஜெபக் குறிப்புகளையும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளாகவும், அவரது சீடர்களாகவும் விரும்புபவர்கள் அவரை அறியும் அறிவில் வளரத் தேவையான படைப்புகளையும் மாதந்தோறும் உங்களுக்குக் கொண்டு வருகிறது.*

**இதழின் உள்ளே...**


| | |
|---|---|
| மறக்க முடியாத அருட்தொண்டர் | 04 |
| அருட்செய்தி! | 05 |
| மே மாத வேத விடைகள் | 06 |
| துதித்து மன்றாடுவோம்! | 07 |
| சரியான விடை எழுதியவர்கள் | 20 |
| வேத வினாக்கள் | 21 |
| நடப்புச் செய்திகள் | 22 |



**ICGM**
**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு,**
**சேலையூர், சென்னை- 600 073.**
அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com


வளரும் விண்ணரசு இதழுக்கு சந்தா அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு அனுப்பிய விபரங்களை தெரிவியுங்கள்.

A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்
## ICGM

**தரிசனம்: (Vision Statement)**

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி.7:9)

“இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.”

**செயல்திட்டம்: (Mission Statement)**

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.


**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

# வில்லியம் டிரேசி

(1807 -1877)

அறிவு



வில்லியம் டிரேசி அமெரிக்க நாட்டில் 1807ஆம் ஆண்டு ஜுன் 2ஆம் நாள் பிறந்தவர். இறையியல் படிப்பை முடித்த அவரை, ஆண்டவர் அருட்பணிக்கென்று இந்தியாவிற்கு அழைத்தார்.

1810இல் உருவாக்கப்பட்ட அமெரிக்கன் மிஷனில் (American Board of Commisionars for Foreign Missions) இணைந்து 1837ஆம் ஆண்டு (தனது 30ஆம் வயதில்) ஏறத்தாழ நான்கு மாத கப்பல் பயணம் செய்து சென்னைக்கு முதலில் வந்தார். அங்கிருந்து அமெரிக்கன் மிஷன் பணிசெய்யும் மதுரைக்கு வந்தார்.

அவருடைய முதல் பணித்தளம் திருமங்கலம். அங்கே நற்செய்திப் பணியுடன், கல்விப் பணியையும் இளைஞர்களுக்கு வழங்க எண்ணிய வில்லியம் டிரேசி, முதலில் ஒரு இலவசப்பள்ளியை 1842இல் தொடங்கினார்.

முழுநேர இந்தியப் பணியாளர்களை உருவாக்கும் வகையில் 1844ஆம் ஆண்டு, பசுமலையில் ஒரு இறையியல் கல்லூரியைத் தொடங்கினார். 22 ஆண்டுக்காலம் அதன் தலைவராக இருந்து 250க்கும் மேற்பட்ட இளைஞர்களை ஊழியர்களாக உருவாக்கினார்.

அதில் படித்த ஒரு இந்திய இளைஞரான ஆல்பர்ட் பார்ன்ஸ் என்பவரே பசுமலையின் முதல் இந்தியப் போதகராவார். 1961ஆம் ஆண்டு, அந்த பசுமலை இறையியல் கல்லூரியில் மாணவர் மத்தியில் ஓர் எழுப்புதல் தோன்றியது.

அன்றைய நாளில், "அமெரிக்கன் மதுரை மிஷனின்" தலைமை இடமாக பசுமலை இருந்தது. பசுமலை உயர் நிலைப்பள்ளி தொடங்கியவரும் வில்லியம் டிரேசியே. அதிலே பெண்களையும் சேர்த்து, பெண் கல்விக்கு அப்பகுதியில் வித்திட்டவர் அவர்.

தொழில் கல்வி கற்பிக்கும் ஒரு நிறுவனத்தையும் பசுமலையில் தொடங்கினார்.

1858 முதல் 1866 வரை தமிழ் வேதாகம மொழி பெயர்ப்புக்குழுவிலும் டிரேசி பங்கு பெற்றார்.

1866ஆம் ஆண்டில் ஒரு பெரிய "தாதுப்பஞ்சமும்" அதைத்தொடர்ந்து காலராவும் மக்களைப் பாதித்தது.

அப்போது, ஏழைகளுக்கு உணவு அளித்ததுடன், பெற்றோரை இழந்த அனாதைக் குழந்தைகளுக்கும் உதவி அளித்தார் வில்லியம் டிரேசி.

30 ஆண்டுகள் அயராது தன் மனைவி எமிலியுடன் சேர்ந்து உழைத்த வில்லியம் டிரேசி, நோய்வாய்ப்பட்டதால் அமெரிக்காவுக்கு சிகிச்சை பெற 1867இல் சென்றார். குணமடைந்தவுடன் தான் நேசித்த மதுரைக்கு, அவர் திரும்பி வந்தார்.

இப்போது அவரை திருப்புவனம் என்ற ஊருக்கு மிஷன் அனுப்பியது. அங்கு பணியாற்றியபோது பக்கவாத நோய் (Stroke) அவரைத் தாக்கியது. உடல் நலம் மிகவும் குன்றியது. இறுதியில் 1877இல் (தனது 70ஆம் வயதில்) அவர் இறந்தவுடன், அவருடைய விருப்பத்தின்படி, அவரது உடல் பசுமலைக்குக் கொண்டுவரப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது.

"பசுமலையின் தந்தை" என்ற பெயரும் அவருக்குக் கிடைத்தது. மதுரைப் பகுதியில் பல ஆண்டுகள் உழைத்த, ஏராளமான இளைஞர்களை அருட்பணியாளர்களாக உருவாக்கிய, அருட்பணியாளர் வில்லியம் டிரேசியை நாம் மறக்க முடியாது.



# கிறிஸ்துவின் செயலாக்கத்தில் இளையோர்

அருட்செய்தி

Rev.G. பொன்னுராஜ்

இளவயதும் வாலிபமும் மாயையே. என்றதொரு பாடல், என்னுடைய இளமைக்காலத்தில், நான் அடிக்கடி மனதில் முணுமுணுத்த பாடல். பிரசங்கி 11:9ஆம் வசனம் சொல்லுவதுபோல, வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு... ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி என்ற வசனம் இளைஞர்களின் மீது கடவுள் கொண்டுள்ள கரிசனையை விளக்குவதாக அமைந்துள்ளது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறுதிக்கட்டளையை சிரமேற்கொண்டு, அவரைப் பற்றி அறிவிப்பதற்காக இளைஞர்கள் பலர் எழும்பினார்கள். அவர்களில் சிலரைக் குறித்து அதிகமாகப் பேசுகிறோம்–பிரசங்கிக்கிறோம்–உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

டேவிட் பிரெய்னார்ட், பற்தொலோமேயு சீகன் பால்க், வில்லியம் கேரி, சி.டி.ஸ்டட் மற்றும் டேவிட் லிவிங்ஸ்டன் ஆகியோர் இயேசு கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசிக்கும் விளக்காக இருந்தவர்கள்.

இவர்களெல்லாம், தங்களுடைய இளமைப்பருவத்தில், தங்களுக்காக உயிரைக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக, அருட்பணி செய்ய, தங்கள் சுயதேசத்தை விட்டுவிட்டு அந்நிய தேசத்தில் ஆண்டவரின் அருட்பணியை செய்தார்கள்.

பல்வேறுபட்ட கலாச்சாரம், பண்பாடு, மொழி ஆகியவை இவர்களைப் பாதிக்கவில்லை. மாறாக, இவர்கள் இருந்த தேசத்திலுள்ளவர்களை இவர்களின் செயல்பாடுகள் கிறிஸ்துவை வெளிப்படுத்தி பாதித்தது.

வேதத்தில் தானியேலையும் அவரது நண்பர்களையும் குறித்து வாசிக்கிறோம். குறிப்பாக தானியேலைக் குறித்து கூறப்படும் விபரங்கள் நமக்கு உற்சாகம் தருபவை.

தானியேல் சுயகட்டுப்பாடு நிறைந்தவர் – தானியேல் 1: 8; 10:3.

தானியேல் தைரியம் நிறைந்தவர் – தானியேல் 5:22-23

தானியேல் நேர்மையானவர் – தானியேல் 6:4; எசேக்கியேல் 14:14

தானியேல் ஜெபிப்பவர் – தானியேல் 2:17; 18, 6:10

தானியேல் பணிவானவர் – தானியேல் 10:17

தானியேல் ஆவிக்குரிய தரிசனம் பெற்றவர் – தானியேல் 7:9-12; 10:5-6.

தானியேல் ஓர் அறிவாளி – எசேக்கியேல் 28:3.

இன்றும் தானியேல் போன்றவர்களையும், மேலே கூறிய தேவனுடைய அருட்பணியாளர்களை முன்னோடியாக வைத்து, செயல்படக்கூடிய இளைஞர்களை தேவன் அழைக்கிறார்.

தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவர் சித்தம் செய்யக்கூடிய இளையோரை அவர் தேடுகிறார்.

அந்த இளையோராக நீங்கள் ஏன் இருக்கக்கூடாது.

இயேசு கிறிஸ்துவும் தனது முப்பதாவது வயதில் அருட்பணியை ஆரம்பித்து, முப்பத்து மூன்றரை வயதில் முடித்தார். ஆனால், பிதாவின் சித்தத்தை முடித்தவராக, தான் இந்த உலகத்தில் வந்த நோக்கத்தை நிறைவேற்றியவராக, எல்லாம் முடிந்தது என்று அவரால் சொல்ல முடிந்தது.

இந்த உலகில், தேவன் நம்மைத் தெரிந்து கொண்டது, தற்செயலாக அல்ல. எல்லாவற்றுக்கும் ஒரு திட்டமுண்டு.

தேவனுடைய சத்தத்தை கேட்கிறவர்களால் மட்டுமே அந்தத் திட்டத்தையும் தெரிந்து கொள்ள முடிகிறது– அந்த சித்தத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்க முடிகிறது.

தேவ சத்தம் கேட்க–அவர் சித்தம் செய்ய, தினமும் வேதத்தை வாசிப்பது–ஜெபிப்பது மிக இன்றியமையாதது.

# ICGM வங்கி கணக்கு விபரங்கள்

**அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

**ஆலயக் கட்டிட நிதிக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 1 1 1 9 4 4 5 4 5 3 1
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : S B I N 0 0 0 1 4 7 9

**மருத்துவ நிதிக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 926010015545855
Bank : AXIS
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

**பத்திரிக்கை ஊழியத்திற்காக**

Account Name : IRAI ARASU TRUST
Account Number: 1 0 1 4 3 1 3 6 7 6 2
Bank : State Bank of India
Branch Name : M.K. University, Palkalai Nagar.
IFSC Code : S B I N 0 0 0 2 2 3 5

**மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் அல்லது வங்கி மூலமாகவும் காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு SMS/Whatsapp மூலமாக 94459 24440 என்ற எண்ணுக்கும் அல்லது கடிதம் மூலமாகவும், தகவல் அனுப்பினால், உங்களுக்கு ரசீது அனுப்ப உதவியாயிருக்கும் நன்றி.**

## வாழ்த்தி வழியனுப்புகிறோம்.



இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனில் கடந்த 22 வருடங்களாக அருட்பணியாளராக, தரிசனம் பரப்பும் ஊழியராக, இறையியல் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய அருள்திரு. பீட்டர் அவர்கள் பணி ஓய்வுக்குப் பின்னும், தொடர்ந்து தரிசனம் பரப்பும் ஊழியராக அருட்பணி செய்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க 2026 ஏப்ரல் 30ஆம் தேதி அன்று, அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

நிறைவான உடல்நலத்துடன் அவரது அருட்பணி தொடர்ந்திட, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் அவரை வாழ்த்துகிறது.

# துதித்து மன்றாடுவோம்




## தமிழ்நாடு

ஜுன்-1

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த் திருமதி.செல்வி**

புதிதாக ஆலயம் கட்டப்பட்டு, மங்களப்படைப்பு செய்யப்பட்டதற்காகத் துதிப்போம். கனகராஜ் மதுப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, திருமலை குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம் திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எறப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, சங்கீதா திருமுழுக்குப் பெற்றதற்காகத் துதிப்போம். விஜயா, ராமசாமி, அமினா, அனுஷ்கா, கிருத்திகா, வளர்மதி, தேவேந்திரன், கமலம் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன் திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்னகொசப்பள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, தரணிப்பிரியாவுக்கு கர்த்தர் கொடுத்த ஆண் குழந்தைக்காக, சாம் விபத்திலிருந்துப் பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். வேல்முருகன், மாயவேல் ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ஜீவா தொடர்ந்து சபை ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**

ஜுன் -2

**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

வீரம்மா, சுகுணா, தாமரை, ஜெகதீஸ்வரி, பழனியம்மாள், நித்தின் ஆகியோர் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுவதற்காகத் துதிப்போம். வீரம்மா குடும்பம், மைனா குடும்பம் இரட்சிக்கப்பட, கரடிப்பட்டியூர், தண்ணீர் பந்தல்பாளையம் ஆகிய பகுதிகளில் ஜெபக்குழு ஆரம்பிப்பதற்கு வீடு கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

பழனியம்மாள், பெரியசாமி ஆகியோர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காக, லீதியாள், ஊழியர் மனைவி ஆகியோர் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். பெரியசாமி மனநோயிலிருந்து நிறைவான சுகம் பெற, பழனியம்மாள் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, கீதா, மரகதம் ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள, நாகம்மாள், முருகன், குப்பாயாள், ரமேஷ், அன்னக்கொடி, சண்முகம், லட்சுமி ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்திருக்க, கொண்டம்பாளையம் பகுதியில் நற்செய்தி அறிவிக்க இருக்கும் தடைகள் விலக ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**
**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**திரு. லூர்டஸ்– திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னாம்பாளையம், பூவளபருத்தி, சண்முகாபுரம், அங்கலக்குறிச்சி, பொன்னாச்சியூர், உப்பிலியனூர், ஆவல்சின்னாம்பாளையம், சமத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, பூஜா, சரவணன், தீபிகா, பாபு, சாதிக் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காகத் துதிப்போம். தாயை இழந்த ஜான்சி கோயில்ராஜ், 2 ஆண் குழந்தைகளை இழந்த பவித்ரா அன்பு ஆகியோருக்கு தேவன் ஆறுதல் தர, ஜான்சி

பிரகாசுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:** (ஜுன்-3)

**திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி**

எபிநேசரின் பேரனுக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக, தினேஷ்-பவித்ரா தம்பதிக்கு தேவன் கொடுத்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். ஆபிரகாம், கிருபை ஆகியோர் நிறைவான சுகம் பெற, சந்தியாவிற்கு வேலை கிடைக்க, அமிர்தம், சுகந்தி, பிரேம்குமார் ஆகியோர் இரட்சிக்கப்பட, காளீஸ்வரி, பவித்ரா, சாமுவேல் ஆகியோர் விரைவில் திருமுழுக்குப் பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**

**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நந்தகுமார் திருமுழுக்குப் பெற்றதற்காக. பிரபு விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, தங்கவேலு மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, சுரேஷ் ஊழியத்திற்கு அர்ப்பணித்ததற்காகத் துதிப்போம். மணி விசுவாசத்தில் நிலைத்திருக்க, லீதியாள், ரூபி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள, அஜித் (எலும்பு முறிவு), சந்தோஷ் (மனநோய்) ஆகியோர் சுகம் பெற, சாரதி, தங்கவேலு ஆகியோர் விரைவில் திருமுழுக்கு பெற, ஊழியரின் தந்தை போதகர் இம்மானுவேல் சந்திரசேகரன் நரம்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**

**திருமதி. கரோலின்**

வாழைக்கொம்பு, நாகூர், புது காலனி, அம்பராம்பாளையம், ஆத்துப்பொள்ளாச்சி, மீனாட்சிபுரம், நஞ்சேகவுண்டன் புதூர் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கனகராஜ், பிரசாந்த், சின்னான், ராஜாமணி, முத்துக்குமார், ராணி, பூங்கொடி, சக்தி, தெய்வகாந்தி, பழனாத்தாள், முத்தம்மாள், சுகன்யா ஆகியோருக்காக, சுகன்யாவுக்குக் கிடைத்த கர்ப்பத்தின் கனிக்காகத் துதிப்போம். முத்துலட்சுமி, பாண்டி ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, மாசிலாமணி நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்** (ஜுன்-4)

**அருட்பணியாளர்:**

**திரு. S. பால்ராஜ் -திருமதி. மரியாள்**

VBS-ல் கலந்து கொண்ட 50 சிறுபிள்ளைகளுக்காக, அமுதாவுக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, இந்துமதி சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பெற்றதற்காகத் துதிப்போம். ஆலய மறுகட்டுமான பணி விரைவில் நடைபெற, தமிழ்ச்செல்வி, அற்புதா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**

**திருமதி. ஜெபரூபி**

சரஸ்வதி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக-வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காக, பாப்புமேரி வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மகா-வடிவேல் மீண்டும் இணைந்து வாழ ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு. சாலமோன்ராஜ்**

**திருமதி. ஜெயக்கொடி**

முருகவேல், வீரா, வேலாள், சுந்தரம்மாள், சத்தியா, ரங்கம்மாள், திருமாத்தாள் ஆகியோர் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, தொண்டையில் நடைபெற்ற அறுவைச்சிகிச்சையினால் பேசாமலிருந்த கலாவுக்கு மீண்டும் பேச்சு வந்ததற்காக, கார்த்திக் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, கோபால் (மனநோய்), டெல்சி (இருதய நோய்) ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சங்கரா, லட்சுமி, அமலா, ராஜம்மாள், பாக்கியலட்சுமி ஆகியோர் விசுவாசத்தில் வளர, கோபால் (நரம்புதளர்ச்சி நோய்), ஊழியரின் மனைவி ஜெயக்கொடி ஆகியோர் சுகம் பெற, மாரியம்மாள், லட்சுமி, கன்னியம்மாள் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்** (ஜுன்-5)

**அருட்பணியாளர் : திரு.J.P.ரவிக்குமார்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சோபனபுரம், கொட்டாம்பட்டி, மங்கப்பட்டி, வைரசெட்டிபாளையம், மராரடி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். செல்வம் மகனுக்கு வேலை கிடைக்க-தொழில் ஆசீர்வதிக்கப்பட, புஷ்பாவுக்கு நிறைவான சுகம் கிடைக்க, ஊழியர் வீடு கட்டுமானப் பணிகள் நிறைவடைய ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நிவேதாவின் கணவருக்கு வேலை கிடைத்ததற்காக, ஊழியரின் தந்தைக்கு சிறுநீரகக்கல் அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். ஸ்வேதாவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, ஹர்ஷித், லேவி கிரேஸ்சன் ஆகியோருக்குத் தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். ராணி (கேன்சர்), ஹர்ஷிதா (வெள்ளையணுக்கள் அதிகம்) ஆகியோருக்கு சுகம் கிடைக்க, புளிய கவுண்டன்பட்டியில் புதிதாக சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட, ரஞ்சனிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, கிரேசிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

(ஜுன்-6)

**அருட்பணியாளர் :**

**திரு. S. சாமுவேல்–திருமதி. ரோகிணி**

நற்செய்தி கேட்ட சுதர்சன், சரண்யா, ராஜேஸ்வரி, வைரம், தாமரை ஆகியோருக்காக, புதிதாக சபைக்கு வருகிற மைனாவுக்காகத் துதிப்போம். சுதர்சன், சரண்யா, ராஜேஸ்வரி, வைரம், தாமரை ஆகியோர் இரட்சிக்கப்பட, அங்கயற்கண்ணி கர்ப்பப்பைக் கட்டி நோயிலிருந்து சுகம் பெற, மினிப்பிரியா ஆராதனையில் கலந்து கொள்ள-குடும்பம் இரட்சிக்கப்பட, நேசன்-சுருதி ஆகியோரின் திருமணம் விரைவில் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. பிரவீன்குமார்–திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட T.அரசப்பட்டி, சமத்துவபுரம், வெயிலுகந்தபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, தூம்பக்குளம், வளையங்குளம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட அருண்குமார், ஆதிகேசவன், ஷர்மிளா, மாரியம்மாள், கிட்டம்மாள் ஆகியோருக்காக, ஜேம்ஸ் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். மதன் விசுவாசத்தில் வளர, மாரியம்மாள் தொடர்ந்து சபைக்கு வர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. M. கார்த்தி–திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, புதுப்பட்டி, பூசலாபுரம், ஜம்பலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, பெரியசாமிக்கு கிடைத்த சுகத்திற்காக, சுபாவுக்கு கர்த்தர் கொடுத்த ஆண் குழந்தைக்காகத் துதிப்போம். ஊழியர் வீடு கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைய, டேனியல், இம்மானுவேல், அபி, எரேமியா, ஆகியோர் விரைவில் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

(ஜுன்-7)

**அருட்பணியாளர் :**

**திரு. A. கந்தசாமி–திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி கேட்ட பொன்னுத்தாயி, மதுமிதா, முத்துப்பாண்டி, காளை, பவித்ரா ஆகியோருக்காக, மீனா முழங்கால் வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, டெய்சி குடும்பம் விஷப்பாம்பிடமிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பிரகாஷ் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பாப்பாத்தி, நர்மதா ஆகியோரின் வீடுகள் கட்டி முடிக்கப்பட, முனீஸ்வரன் முடக்குவாத நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய-தேவைகள் சந்திக்கப்பட

ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. P. சத்தியநாதன்–திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குச்சம்பட்டி, கண்ணாபட்டி, கோபாலபுரம், சத்திரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, முனுசாமி வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, கஸ்தூரிக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். குச்சம்பட்டி ஆலயப் போதகர் வீடு சீரமைக்கப்பட, சங்கிலி, முத்தையா, முனுசாமி, அம்பிகா, சந்துரு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. P. ராஜா–திருமதி. அன்னாள்**

ராதாவிற்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக, ஜெயா மரண அவஸ்தையிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட பவுன், சென்னியம்மாள், தங்கத்தாய், பாக்கியலட்சுமி, சுகந்தி, அழகுத்தாய் பூமயில், ஐயப்பன் ஆகியோர் இரட்சிக்கப்பட, ராதாவிற்கு நல்ல வேலை கிடைக்க, ஜெயாவிற்கு நிறைவான சுகம் கிடைக்க–ஆலயம் வர ஜெபிப்போம்.

**ஜுன்-8**

**அருட்பணியாளர் :**

**திரு. காளிமுத்து–திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காளப்பன்பட்டி, பெருங்காமநல்லூர், அழகுரெட்டிபட்டி ஆகிய கிராமங்களுக்காக, காளப்பன்பட்டியில் நடைபெற்ற ஜெப கூடுகைக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட பாண்டியம்மா, வீரம்மா ஆகியோருக்காக, பாண்டியம்மாளுக்கு தேவன் கொடுத்த பெண் குழந்தைக்காகத் துதிப்போம். பிரசன்னா நீட் தேர்வில் தேர்ச்சி பெற, கலைச்செல்வி கணவனுக்கு நிரந்தர வேலை கிடைக்க, புது ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

தாரணி இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சுபா சாலமன், கொடியரசி ஆகியோருக்குப் பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். திருச்சபையின் மூப்பர் ஆபிரகாம் பாண்டி அவர்களை இழந்த குடும்பத்தின் ஆறுதலுக்காக, செல்வம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. M. அகஸ்டின்–திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காந்திநகர், சங்கம்பட்டி, மணல்பட்டி, செல்லம்பட்டி, வாலாந்தூர் ஆகிய கிராமங்களுக்காக, VBSஇல் 200 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காக, ராஜசேகருக்கு கிடைத்த சுகத்திற்காக, முகேஷ் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நான்கு வயது குழந்தையை இழந்து தவிக்கும் மீனா குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தர, திவ்யா, கிளாடிஸ், கயல் ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க, இந்திராவுக்கு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**ஜுன்-9**

**அருட்பணியாளர் :**

**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

பாண்டியம்மாவுக்கு தேவன் சுகம் கொடுத்ததற்காக, பிரியங்காவுக்கு தேவன் கொடுத்த ஆண் குழந்தைக்காகத் துதிப்போம். பெஞ்சமின்–பிரியங்கா மகனுக்கு பேச்சு வர, பிளஸ்ஸன் வயிற்றுக் கட்டியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

பெரிய கருப்பன், கலையரசன், கார்த்திக், கருணாகரன் சாந்தி ஆகியோர் நற்செய்தியை கேட்டதற்காக, கிருபா அம்சுவுக்கு அரசு உதவி கிடைத்ததற்காக–சுகம் கிடைத்ததற்காக, சரண்யாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, சுருதி, சூர்யா, சினேகா ஆகியோர் ஆராதனைக்கு வருவதற்காகத் துதிப்போம். பெரிய கருப்பன் (பக்கவாத நோய்), சிந்தாமணி (சர்க்கரை நோய்), சந்திரா தேவி, ராமசாமி, விஜயா, ராமாயி, முத்துமாலா, ஆனந்தகுமார், உஷா, ஏஞ்சல் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ராஜன், ஜான், மணி,

மோசஸ் ஆகியோருக்கு நிரந்தர வேலை கிடைக்க–இரட்சிக்கப்பட, பெருமாள், சின்னசாமி ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, லங்கம்மாள் தொடர்ந்து ஆலயம் வர, அழகுத்தாய், சரண்யா, சினேகா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஐஸ்வர்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, குமரன், தமயந்தி, கமலக்கண்ணன், அர்ச்சனா தேவி, கீர்த்தனா, முத்து, ரவிச்சந்திரன், புஷ்பம், புஷ்பத்தாய் ஆகியோர் இரட்சிக்கப்பட, மீனம்மாள், ராஜம்மாள் ஆகியோர் விசுவாசத்தில் வளர, அம்சு காந்தி அம்மாளுக்கு கண்பார்வை கிடைக்க, சோனா, பிளசி ஆகியோர் சரளமாய் பேச ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. பால்ராஜ்–திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி கேட்ட, விருமாண்டி, முத்துச்செல்வம், விஜயா, பிரவீன், பெரிய பாண்டி, காசி, பஞ்சவர்ணம், சரண்யா, கதிரேசன் ஆகியோருக்காக, புதிதாக ஆலயம் வந்த பஞ்சவர்ணம், கதிரேசன் ஆகியோருக்காக, முத்துச்செல்வம் மன நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பிரவீன் தொடர்ந்து ஆலயம் வர–குடும்பமாக இரட்சிக்கப்பட, கதிரேசன் தோல் நோயிருந்து சுகம் பெற–திருமணத் தடை விலக, சரண்யாவின் கணவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற–குடும்பமாக இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுன்-10**

**அருட்பணியாளர் :**

**திரு. G. ஜெகன்–திருமதி. திவ்யா**

நற்செய்தி கேட்ட செல்விக்காக, அஞ்சு கனியின் கணவர் சுகம் பெற்று வருவதற்காக, திவ்யா, ஜெலீன் ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். விஜயராணிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, புதிதாக நற்செய்தி கேட்ட மாரியம்மாள், பரசுராம், பன்னீர், ஜீவ ராஜா, கண்ணன், கணேசன், வெற்றிவேல், சக்தி, மீனா, பாரதி ஆகியோர் இரட்சிக்கப்பட, தங்கராஜ், பாலகணேஷ் ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

VBS ஊழியத்தில் ஆசிரியராக செயல்பட்ட நிசானி, லீனா, மெலினா, எஸ்தர், கார்த்திக், சகாயராணி, கனி ஆகியோருக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொக்கநாதபுரம், வடிவேல்கரை, அழகுப்பிள்ளை நகர், லாலா சத்திரம், சாய் கார்டன், ஏற்குடி, காந்தி நகர், லாலாசத்திரம் ஆகிய பகுதிகளுக்காக, சக்திவேல், ரித்திக் ஆகியோர் தொடர்ந்து ஞாயிறு பள்ளியில் கலந்துகொள்வதற்காகத் துதிப்போம். அன்னம்மாள் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற–கணவர் வீரபாண்டியன் இரட்சிக்கப்பட, பெரிய கருப்பு, ஜீவா, தேஜஸ்வின் ஆகியோர் இரட்சிக்கப்பட, நர்மதா, நாகலட்சுமி ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க–ஆராதனையில் கலந்துகொள்ள தடை செய்யும் அவர்களது தகப்பனார் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. பிலிப் முருகன்–திருமதி. அனிதா**

சிறுவர் ஊழியத்திற்கானத் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக, கொடியம்மாள் வீடு கட்டி முடிக்கப்பட்டு–மங்களப்படைப்பு செய்யப்பட்டதற்காகத் துதிப்போம். சாம் குடல் நோயிலிருந்து சுகம் பெற–ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க, சிந்தியாவின் கணவர் இரட்சிக்கப்பட–பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட, சத்தியா, மாயி ஆகியோர் இரட்சிக்கப்பட–குழந்தை பாக்கியம் கிடைக்க, ஜோதி அம்மாள் சுகம் பெற ஜெபிப்போம்.

**ஜுன்-11**

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து–திருமதி. கனியமுது**

சாந்தகுமார், சாமுவேல், சீதா ஆகியோருக்கு நிரந்தர வேலை கிடைக்க–ஏற்ற காலத்தில் திருமணம் நடைபெற, கனகா, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J. ஜெயகுமார்–திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கம்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளப்பாறைபட்டி,

தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, வெற்றிச்செல்விக்கு கர்த்தர் தந்த சுகத்திற்காக, பானு, முத்துராமன், சாந்தி ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஒப்புக் கொடுத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட தினேஷ், ஜெகதீஷ், மீனாட்சி, நவீன், முகிலன், ஆகாஷ், அஸ்வின், கௌசிகா, அருண், மீனா, பேரரசு, முத்துராமன், சாந்தி ஆகியோர் இரட்சிக்கப்பட, போதகர் மனைவி கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு.P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா**

புதிதாக சபைக்கு வந்த எஸ்தர் ராணி, குருசாமி, ஏஞ்சல் ஆகியோருக்காகத் துதிப்போம். பாலக்கோம்பை ஆலயத்தில் தனியாக கழிப்பறை கட்டப்பட, வீரவேல், சின்னம்மாள் ஆகியோருக்கு செவிலியர் வேலை கிடைக்க, செல்வம் மகன், பேரின்பம், பவித்ரா ஆகியோருடைய குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜுன்-12**

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்-திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கண்டமனூர், தேக்கம்பட்டி, T.மீனாட்சிபுரம், அன்னை இந்திரா நகர் ஆகிய கிராமங்களுக்காக, திவ்யாவுக்கு பெண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரிந்த ராஜேஷ் கண்ணன் குடும்பம் மீண்டும் ஒன்று சேர, மணிகண்டன் (தீக்காயம்), அனிதா (ஒற்றைத் தலைவலி), லட்சுமி (குறை இரத்த அழுத்த நோய்) ஆகியோர் சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, கோட்டப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, தங்கப்பாப்பா, லட்சுமி ஆகிய குடும்பங்கள் சமாதானம் பெற்றதற்காக, ஸ்டாலின், விஜயலட்சுமி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, ஆரோக்கிய மேரிக்கு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். தங்கபாப்பா மகளுக்கு திருமணம் நடைபெற-கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, ராமலிங்கம் மகன் மற்றும் மருமகள் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட, வாசுகி மகன் மற்றும் மகளுக்கு திருமணம் நடைபெற-தொழில் முன்னேற்றம் அடைய, பாலச்சந்திரன்-மனைவி மகள், ஜீவா, கருப்பசாமி, சிவமுருகன், மகாலட்சுமி, தீபிகா, வேல்முருகன், ஜெயலட்சுமி, ஜெயஸ்ரீ, கனிஷ்கா, தர்ஷினி, பிரியதர்ஷன், பிரகாஷ், மாதேஷ், மாதவன் ஆகியோர் இரட்சிக்கப்பட, பாலச்சந்திரன் மனநோயிலிருந்து சுகம் பெற- குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**

**திருமதி. விஜயா**

புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட மீனாட்சி குடும்பத்திற்காக, சிறுவர் ஊழியம் சிறப்பாக நடைபெற்றதற்காக, ஜீவா குடும்பமாக ஆலயம் வருவதற்காக, ஜான் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். புதியதாக 10 குடும்பங்கள் ஆலயம் வர, குட்டி அம்மா, மாரி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, ஆலயம் புதுப்பிக்கப்பட-தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுன்-13**

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

சிவகாமியாபுரத்தில் நடைபெற்ற VBSல் 82 பிள்ளைகள்-மருதங்கிணறில் 100 பிள்ளைகள் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். பாண்டீஸ்வரி குடும்பமாக விசுவாசத்தில் வளர-இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**கரூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. J. பவுல்ராஜ்- திருமதி. எமீமாள்.**

திருமணம் முடிந்து 7 வருடங்களுக்குப் பிறகு பவித்திராவிற்கு தேவன் கொடுத்த கர்ப்பத்தின் கனிக்காக, மெர்லினுக்கு சுகப்பிரசவத்தில் ஆண்குழந்தை கிடைத்ததற்காக, ரவிக்கு இருதய அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்று-சுகம் பெற்றதற்காக, லோகேஷ்

கால் எலும்பு முறிவிலிருந்து சுகம் பெற, சுதாகர், தேன்மொழி, ஈஸ்வரி ஆகியோர் இரட்சிக்கப்பட, மெர்லின் இருதயநோயிலிருந்து சுகம் பெற, முருகன் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, பிரசாந்த்-ஜெனிபர் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

## அருட்பணியாளர் :

## திரு.D. தங்கராஜ்-திருமதி. எஸ்தர் பிரியா

வெண்ணிலாவுக்கு ஆஞ்சியோ சிகிச்சை செய்யப்பட்டு-சுகம் பெற்று வருவதற்காக, முனீஸ்வரன் கல்லடைப்பு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, அம்சா குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். அந்தோணிசாமி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, பிரகாஷ்,வீரப்பன் ஆகியோர் வீடுகள் கட்டப்பட-தேவைகள் சந்திக்கப்பட, சிறுவர் ஊழியம் நடைபெறுவதற்கு தடைகளை உண்டாக்குகிறவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜுன்-14**

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக், திரு.T.S. தெங்கோலுன் ஹோகிப் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

வடஇந்தியாவில் கோடை விடுமுறை வேதாகமப்பள்ளி சிறப்பாக நடைபெற்றதற்காகத் துதிப்போம். அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

## மொழிபெயர்ப்புப் பணி

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி “ஆடியோ வேதாகமம்”, தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**ஜுன்-15**

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச் சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், திருமதி. சாரா ஜான், திருமதி. மேக்டலின் சிநேகவதி ஆகியோருக்காக ஜெபிப்போம்.

இம்மாதம் இதழ் வெளியிடப் பட்டதற்காக, இதழின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். இதழில் வெளியிடப்படும் கட்டுரைகள் வாசகர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க, இதழ் வாசகர்கள் விரும்பும்வண்ணம் வெளியிடப்பட, புதிய வாசகர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.**N.J.** ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணி களுக்காகவும் ஜெபிப்போம்.

**நிர்வாகம்** ஜூன்-16

செயற்குழு உறுப்பினர்கள் திரு.**J.** எபிநேசர் மார்டின், **Dr.S.** அருண், திரு.**K.** ஜான்சன், திரு.**P.** கோபால கிருஷ்ணன், **Dr.** தினகரன் ரிச்சர்ட், திரு. **J.E.** பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 17 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாகர்கோவில், கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பறக்கை, தெங்கம்புத்தூர், வடசேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, 110 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, வீட்டுக்கூரை இடிந்து விழுந்த விபத்தில் சுரேந்திரக்குமார் காப்பாற்றப்பட்டதற்காகத் துதிப்போம். மஹிஷா, வினோத் ஆகியோர் திருமுழுக்கு பெற ஆயத்தமாக இருப்பதற்காக, அன்ஷாவை இழந்த குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

## ஜெபிப்போம்

* சத்தீஷ்கரில் கட்டப்பட்டு வரும் 4 ஆலயக்கட்டுமானப்பணிகளுக்காக.
* கோடை விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்து கொண்டவர்கள், தொடர்ந்து ஞாயிறு ஓய்வுநாள் பள்ளிக்கு வர.
* இந்தக் கல்வியாண்டில் அருட்பணியாளர்களுடைய குழந்தைகளின் கல்வி நிதித் தேவைகள் சந்திக்கப்பட. (16.00 இலட்சம்)
* இறையியல் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகள் சந்திக்கப்பட
* குருணைக்கல்பட்டி (திருப்பூர்), இந்திராநகர் (மதுரை) ஆகிய ஆலயங்களின் மறு ஆலயக்கட்டுமானப்பணிகளுக்காக- தேவைகள் சந்திக்கப்பட.

# வட இந்தியா

## மேற்கத்திய கோண்டுகள் சத்தீஸ்கர் மாநிலம்

ஜுன்-17

### வட இந்தியா

**அருட்பணியாளர்கள்:**

